மின்னிதழ் E-paper
ஈழநாடு
Eelanadu
06.07.2020 ஞாயிற்றுக்கிழமை

## பாடசாலைகள் இன்று திறப்பு

கொழும்பு, ஜூலை 06
அனைத்துப் பாடசாலைகளும் கல்வி நடவடிக்கைகளுக்காக இன்று திறக்கப்படவுள்ளன. நான்கு கட்டங்களாகப் பாடசாலைகளை மீண்டும் திறப்பதற்கு எடுக்கப்பட்ட தீர்மானத்துக்கு அமையவே, இரண்டாம் கட்டமாக அனைத்துப் பாடசாலைகளும் இன்று திறக்கப்படுகின்றன.
தரம் 5, 11 மற்றும் தரம் 13 மாணவர்களுக்கான கல்வி நடவடிக்கைகள் இன்று ஆரம்பமாகவுள்ளன. அனைத்து ஆசிரியர்களும் பாடசாலைகளுக்கு இன்று சமுகமளிக்க வேண்டும் எனவும், கற்பித்தலுக்கு முன்னுரிமை வழங்க

02

# 13ஆவது திருத்தத்தை அரசு பாதுகாத்து பலமாக்கட்டும்

## திஸ்ஸ விதாரண கோரிக்கை

யாழ்ப்பாணம், ஜூலை 06
அரசமைப்பின் 13 ஆவது திருத்தச் சட்டத்தை நீக்கக்கூடாது. அந்தச் சட்டத்தை பாதுகாத்து பலப்படுத்தவேண்டுமென லங்கா சம சமாஜக் கட்சியின் செயலாளர் பேராசிரியர் திஸ்ஸ விதாரண யாழ்ப்பாணத்தில் வைத்து தெரிவித்துள்ளார்.



02

## மா விலை அதிகரிப்பு

கொழும்பு, ஜூலை 06
5 கிலோ கிராம் கோதுமை மா பைக்கற்றின் விலை 5 ரூபாவால் அதிகரிக்கப்பட்டுள்ளது என்று பிறிமா நிறுவனம் அறிவித்துள்ளது.
கோதுமை மாவின் விலையோ, வேறு எடையுடைய பக்கற்றினதோ விலை அதிகரிக்கப்படவில்லை என அந்த நிறுவனம் மேலும் தெரிவித்துள்ளது.

## விபத்தில் பலியானார் வேட்பாளர்!



கொழும்பு, ஜூலை 06
ஐக்கிய மக்கள் சக்தியின் புத்தளம் மாவட்ட வேட்பாளரான, அசோக வடிகமங்காவ நேற்று இடம்பெற்ற

02

## சிறிதரனிடம் பொலிஸார் விசாரணை

யாழ்ப்பாணம், ஜூலை 06
தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறிதரனிடம் விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.
கிளிநொச்சியில் உள்ள அவரது காரியாலயத்தில்

02

## பூநகரியில் கோர விபத்து: ஒருவர் சாவு!



கிளிநொச்சி, ஜூலை 06
கிளிநொச்சி பூநகரி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட தம்பிராய் பகுதியில் நேற்று அமாலை இடம்பெற்ற விபத்தில் ஒருவர் உயிரிழந்துள்ளார்.
இந்த விபத்துச் சம்பவம் 5 மணியளவில் இடம்பெற்றுள்ளது.
வியாபார நோக்கத்துக்காக வடிவமைக்கப்பட்ட முச்சக்கர மோட்டார் சைக்கிள் வாகனம் இந்த விபத்தில் தீக்கிரையாகியுள்ளது.

02

## மொறட்டுவ பல்கலை மாணவன் பூநகரியில் நடந்த விபத்தில் சாவு!

### நேற்றுக் காலை துயரச் சம்பவம்



யாழ்ப்பாணம், ஜூலை 05
யாழ்ப்பாணத்திலிருந்து பூநகரி ஊடாக தென்னிலங்கைக்குப் பயணித்த மொறட்டுவ பல்கலைக்கழக இறுதி வருட மாணவன் ஒருவர் விபத்தில் சிக்கிப் பரிதாபகரமாக உயிரிழந்துள்ளார்.

02

## சிவாஜிலிங்கம் கைதாகி பிணையில் விடுவிப்பு!



யாழ்ப்பாணம், ஜூலை 06
தமிழ் மக்கள் தேசியக் கூட்டணியின் வேட்பாளர் எம்.கே.சிவாஜிலிங்கம், நேற்று அவரது வீட்டில் வைத்து பொலிஸாரால் கைது செய்யப்பட்டு, பின்னர் பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளார்.

02

## யாழ். பல்கலையில் கரும்புலிகள் தினம்



யாழ்ப்பாணம், ஜூலை 06
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் கரும்புலிகள் தினம் உணர்வு பூர்வமாக அனுஷ்டிக்கப்பட்டுள்ளது.
கடும் இராணுவக் கெடுபிடிகள் மற்றும் புலனாய்வாளர்களின்

02

## பெண்ணொருவர் ரி.ஐ.டியால் கைது

கிளிநொச்சி, ஜூலை 06
இயக்கச்சி வெடிப்புச் சம்பவத்தையடுத்து, குற்றச் செயலுக்கு ஒத்துழைப்பு வழங்கியமை மற்றும் தடயப் பொருள் களை அழித்தமை ஆகிய

02

## டிப்பரின் கீழ் நசியுண்டு இளைஞன் உயிரிழப்பு!



யாழ்ப்பாணம், ஜூலை 06
கோப்பாய் சந்தி அருகில் பகுதியில் கனரக வாகனங்கள் திருத்தும் கராச்சில் டிப்பர் வாகனத்தின் கீழ் பகுதியில் பழுது பார்த்துக்கொண்டிருந்த இளைஞன்

02

## ரணிலை நீக்குவோம்!

### நவீன் அதிரடி அறிவிப்பு

கொழும்பு, ஜூலை 06
"ஐக்கிய தேசியக் கட்சியை சரியான பாதைக்கு எடுத்துச் செல்லாவிட்டால் ரணில் விக்கிரமசிங்கவை தலைமைப் பதவியில் இருந்து நீங்குமாறு வலியுறுத்துவோம்."
- இவ்வாறு ஐக்கிய தேசியக் கட்சியின் தேசிய அமைப்பாளரும் நுவரெலியா மாவட்ட வேட்பாளருமான நவீன் திஸாநாயக்க தெரிவித்தார்.
நாடாளுமன்றத்

02

## கொரோனா நிலவர அறிக்கை

| தொற்றாளர் | புதிய தொற்றாளர் | சிகிச்சை பெறுவோர் | சந்தேகநபர்கள் | குணமடைந்தோர் |
|---|---|---|---|---|
| 2,076 | 02 | 162 | 38 | 1,903 |

இறப்பு 11
மூலம் : சுகாதார மேம்பாட்டு பணியகம்

# சிறுபான்மை பிரதிநிதித்துவத்தை காப்பாற்ற ஐக்கிய மக்கள் சக்தியை பலப்படுத்துங்கள்

## - முன்னாள் அமைச்சர் ரிஷாட் கோரிக்கை -

மன்னார், ஜுலை 06

சமூகக் கட்சிகள் இடையே சிறுசிறு கருத்து வேறுபாடுகள், கொள்கை ரீதியான முரண்பாடுகள் இருக்கின்ற போதும், அவற்றையெல்லாம் ஒருபுறம் தள்ளிவிட்டு, இந்தத் தேர்தலில் சிறுபான்மை பிரதிநிதித்துவத்தைக் காப்பாற்ற களமிறங்கியுள்ளோம் என்று மக்கள் காங்கிரஸ் தலைவர் ரிஷாட் பதியுதீன் தெரிவித்தார்.

மன்னார் பொற்கேணியில் இடம்பெற்ற தேர்தல் பிரசாரக் கூட்டத்திலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

மேலும், "சமூகம், பல்வேறு சவால்களுக்கு முகங்கொடுத்து வருகின்றது. இவற்றை முறியடிப்பதற்கு ஒற்றுமையே முக்கியம். இக்கட்டான சூழ்நிலைக்கு தள்ளப்பட்டிருக்கும் நாம், இந்தத் தேர்தலில் எவ்வாறு நடந்துகொள்ள வேண்டுமென்று நீங்கள் அறிவீர்கள். உங்களுக்கிடையிலான சிறிய பிரச்னைகளையும் சச்சரவுகளையும் தூக்கிவீசி விட்டு, தேர்தலில் ஒன்றுபடுங்கள். வன்னி மாவட்டத்தின் பிரதிநிதித்துவத்தைக் காப்பாற்றும் வகையிலும், அதனை வென்றெடுக்கும் வகையிலுமே முஸ்லிம் காங்கிரஸ/டனும் முற்போக்கு சக்திகளுடனும் இணைந்து தேர்தலில் போட்டியிடுகின்றோம்.

இனவாதிகள் எம்மை மிக மோசமாக தூசிப்பதற்கும், பழிவாங்குவதற்கும், எங்கள் குடும்பத்தினர் மீது அடக்குமுறைகளை கட்டவிழ்த்துவிடுவதற்கும், முசலிப் பிரதேசத்தில் நாம் மேற்கொண்ட மீள்குடியேற்ற முயற்சிகளும் செயற்பாடுகளுமே பிரதான காரணங்கள்.

உங்களது சொந்தக் காணிகளிலே, நீங்கள் முன்னர் வாழ்ந்த பூமியிலே, உங்களை நிம்மதியாக குடியேற்ற வேண்டுமென்ற நோக்கில், வளர்ந்திருந்த காடுகளை துப்பரவாக்கி, கண்ணிவெடிகளை அகற்றி மீள்குடியேற்றியதனாலேயே, "வில்பத்துவை நான் அழிப்பதாக" மோசமாக குற்றஞ்சாட்டினர். பெரும்பான்மை சிங்களவர் மத்தியில் என்னை பிழையாக சித்தரித்து, "காடழிப்பவர்" என்ற ஒரு பிரமையை தோற்றுவித்தனர்.

இந்தப் பிரதேசத்தில் நாம் மேற்கொண்ட அத்தனை வேலைத்திட்டங்களும் இலகுவாக கிடைத்த ஒன்றல்ல. பல்வேறு கஷ்டங்களின் மத்தியிலே ஒவ்வொன்றாக, படிப்படியாக கொண்டுவந்தவைதான். காணிப் பிரச்சினைகள் வந்தபோது, அளக்கட்டு போன்ற புதிய கிராமங்களை உருவாக்கி, உங்களை குடியமர்த்தி, எதிர்கால சந்ததியினருக்கு விமோசனம் வழங்கினோம். மறிச்சிக்கட்டி தொடக்கம் கொண்டச்சி வரையிலும், அதற்கப்பால் பொற்கேணி, அளக்கட்டு, அகத்திமுறிப்பு, பிச்சவாணிபகுளம் என காணிகளைப் பகிர்ந்தளித்து உங்களைக் குடியேற்றினோம். பிள்ளைகளின் கல்விக்காக புதிய பாடசாலைகள் பலவற்றை உருவாக்கியதோடு மாத்திரமின்றி, ஏற்கனவே இடிந்து, தகர்ந்து கிடந்த பாடசாலைகளை மீள நிர்மாணித்து, அவற்றுள் பல பாடசாலைகளில் மாடிக்கட்டிடங்களையும் அமைத்துத் தந்தோம். மொத்தத்தில் இந்தப் பிரதேசத்தில் மக்களின் அடிப்படைத் தேவைகள் எல்லாவற்றையும் முடிந்தளவில் நிவர்த்தி செய்துள்ளோம்.

இந்தத் தேர்தலில் நாங்கள் தொலைபேசி சின்னத்தில் களமிறங்கியுள்ளோம். நாம் பிரிந்துவிடுவோமேயானால் வருங்காலத்தில் தலைகுனிவோடு வாழ வேண்டிய துர்ப்பாக்கிய நிலைக்கு தள்ளப்படுவோம். எனவே, வாக்காளர்களாகிய நீங்கள் யதார்த்தத்தைப் புரிந்து, ஒன்றுபட்டு, எமக்கு வெற்றியைப் பெற்றுத்தாருங்கள்" - என்றார்.

### 13ஆவது...

வடக்குக்கு விஜயமொன்றை மேற்கொண்ட அவர் யாழ். ஊடக அமையத்தில் நேற்று ஞாயிற்றுக்கிழமை ஊடக சந்திப்பொன்றை நடத்தினார்.

இந்தச் சந்திப்பின்போது அரசமைப்பின் 13 ஆவது திருத்தத்தை நீக்கவேண்டுமென தெற்கில் முன்னெடுக்கப்படும் பிரசாரங்கள் குறித்து எழுப்பிய கேள்விக்குப் பதிலளிக்கையிலையே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

இலங்கையில் அரசமைப்பில் உள்ள 13 ஆம் திருத்தத்தை நீக்க முடியாது. அந்தச் சட்டம் மாற்றப்படவும் கூடாது. ஏனெனில் அரசமைப்பில் தற்போதுள்ள அந்தச் சட்டம் பாதுகாத்து பலப்படுத்தப்படவேண்டும். அதுவே நல்லது என்பதே என்னுடைய நிலைப்பாடாக இருக்கிறது.

இந்தச் சட்டமூலம் போன்று பலவற்றையும் நீக்க வேண்டும், மாற்றவேண்டுமெனப் பலரும் பலவற்றையும் கூறுவார்கள். ஆனால் அவை குறித்து அரசு எதனையும் அறிவிக்கவில்லை. ஆகவே 13 ஆவது திருத்தம் மாற்றப்படவே நீக்கப்படவோ கூடாது என்பதே எனது நிலைப்பாடாக இருக்கிறது. இந்தச் சட்ட மூலம் தொடர்பில் அனைவரும் உணர்ந்து செயற்படவேண்டும் -என்றார்.

### யாழ். பல்கலையில்...

அச்சுறுத்தல்களை மீறி யாழ். பல்கலைக்கழக கலைப்பீட மாணவர் ஒன்றியத்தால் இந்த நிகழ்வு அனுஷ்டிக்கப்பட்டுள்ளது.

நேற்று மாலை 06 மணியளவில் பல்கலைக்கழக வளாகத்தினுள் பிரத்தியேகமாக அமைக்கப்பட்ட இடம் ஒன்றில் இந்த நினைவேந்தல் நிகழ்வு இடம்பெற்றது.

### ரணிலை...

தேர்தலுக்கு பின்னர் ஐக்கிய தேசியக் கட்சியை மீண்டும் பலம் மிக்கதாகக் கட்டியெழுப்புவோம் எனவும் அவர் உறுதியளித்தார்.

வளப்பனை பிரதேசத்தில் நேற்று முன் தினம் நடைபெற்ற தேர்தல் பிரசாரக் கூட்டத்தில் கலந்துகொண்டு உரையாற்றுகையில் அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

ஐக்கிய தேசியக் கட்சியில் இருந்து வெளியேறி சென்றிருப்பவர்கள் தொடர்பில் நாங்கள் கவலைப்படமாட்டோம். அவர்கள் சென்றாலும் கட்சி ஆதரவாளர்கள் எங்களுடனே இருக்கின்றனர். அதனால் கட்சியைவிட்டு செல்லாமல் கட்சியைப் பாதுகாத்த ஆதரவாளர்களைத் தேர்தலுக்கு பின்னர் பாதுகாக்க நாங்கள் நடவடிக்கை எடுப்போம் - என்றார்.

### விபத்தில்...

விபத்தில் உயிரிழந்தார்.

புத்தளம்- குருநாகல் வீதியின் பாதெனிய பிரதேசத்தில் இடம்பெற்ற வாகன விபத்திலேயே அசோக வடிகமங் காவ உயிரிழந்துள்ளார்.

ஜனாதிபதித் தேர்தலில் சுயேச்சை வேட்பாளராக போட்டியிட்ட இவர், வட மேல் மாகாண சபையின் முதலமைச்சராகவும் இருந்தவர் என்பது குறிப்பிடத்தக்கது.

### சிறிதரனிடம்...

வைத்து நேற்று ஞாயிற்றுக்கிழமை பொலிஸார் இவ்வாறு விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

தமிழீழ விடுதலைப் புலிகளின் கரும்புலிகள் நாள் நேற்று முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரால் அனுஸ்டிக்கப்படவுள்ளதாகக் கிடைத்த தகவலை அடுத்தே இந்த விசாரணை முன்னெடுக்கப்பட்டுள்ளது.

இதன்போது முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரின் நேற்றைய நிகழ்வுகள் தொடர்பாகவும் விசாரிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

### பெண்ணொருவர்...

குற்றச்சாட்டுகளில் கிளிநொச்சியில் பயங்கரவாத விசாரணைப் பிரிவினரால் பெண்ணொருவர் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

நேற்றுமுன்தினம் இரவு பயங்கரவாத தடுப்பு பிரிவினரால் குறித்த பெண் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

பளை பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட இயக்கச்சியில் கடந்த வெள்ளிக்கிழமை வெடிப்பு சம்பவம் ஒன்று இடம்பெற்றது. அதில் குடும்பஸ்தர் ஒருவர் படுகாயமடைந்து கிளிநொச்சி வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக அநுராதபுரம் வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டார். வெடிப்புச் சம்பவம் இடம்பெற்ற பகுதியில் நேற்றுமுன்தினம் பொலிஸார் சோதனை நடவடிக்கையில் இறங்கினர்.

பிளாஸ்ரிக்கைப் பயன்படுத்தி தயாரிக்கப்பட்ட குண்டுகள் 2, கரும்புலிகள் நாள் சுவரொட்டி - 1, அலைபேசி 1, லப்ரொப் - 1, டொங்கிள் - 1, பென்கமெரா - 1 மற்றும் சி.டி. - 1 ஆகியன பொலிஸாரால் மீட்கப்பட்டன.

வெடிப்புச் சம்பவத்தில் பாதிக்கப்பட்ட குடும்பஸ்தர் முன்னரே கைதுசெய்யப்பட்டிருந்தார். அவருடன் கைதுசெய்யப்பட்ட பெண் ஆசிரியை என்றும், அவர் சட்டரீதியற்ற முறையில் திருமண வாழ்க்கை நடத்தி வந்துள்ளார் என்றும் ஆரம்பகட்ட விசாரணையில் தெரியவந்துள்ளது என்று பொலிஸார் கூறுகின்றனர்.

வெடிப்புச் சம்பவத்தில் படுகாயமடைந்த நபர் முன்னாள் போராளி என்று பொலிஸ் விசாரணையில் தெரியவந்துள்ளது.

சம்பவம் தொடர்பில் பயங்கரவாத விசாரணைப் பிரிவு, குற்றத் தடுப்புப் பிரிவுப் பொலிஸார் விசாரணை நடத்துகின்றனர்.

### டிப்பரின்...

மீது வாகனப் பெட்டி சரிந்ததில் அவர் உடல் நசுங்கி உயிரிழந்துள்ளார்.

சுமையுடன் பெட்டியை ஜக் மூலம் தூக்கிவிட்டு அதன் கீழிருந்து இளைஞர் பழுது பார்த்துக் கொண்டிருந்தார். இதன்போது ஜக் நழுவி பெட்டி இளைஞன் மீது இறங்கியுள்ளது என்று கோப்பாய் பொலிஸார் தெரிவித்தனர்.

மானிப்பாய் பகுதியைச் சேர்ந்த ஒ.லிகிந்தன் என்ற இளைஞன் சம்பவ இடத்திலேயே உயிரிழந்துள்ளார்.

சம்பவம் தொடர்பில் கோப்பாய் பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

### பூநகரியில்...

கிளிநொச்சி, பூநகரி-பரந்தன் வீதியில் தம்பிராய் பகுதியில் இந்த விபத்து இடம்பெற்றுள்ளது. டிப்பர் வாகனத்துடன் மோதுண்ட குறித்த ஓட்டோ வாகனம் தீக்கிரையானது. அத்துடன் அந்த வீதியில் பயணித்த மற்றுமொரு மோட்டார் சைக்கிளும் விபத்துக்குள்ளாகியுள்ளது. விபத்தில் ஆண் ஒருவர் உயிரிழந்துள்ளார். உயிரிழந்தவரின் சடலம் கிளிநொச்சி வைத்தியசாலைக்கு எடுத்து செல்லப்பட்டுள்ளதாக பூநகரிப் பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

விபத்து தொடர்பான மேலதிக விசாரணைகளை பூநகரி பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர்.

### மொறட்டுவ...

பூநகரியில் நேற்றுக் காலை இந்த விபத்துச் சம்பவம் இடம்பெற்றது.

சம்பவத்தில் மொறட்டுவ பல்கலைக்கழக இறுதி வருட மாணவன் மோகன் ஆகாஷ் என்பவரே உயிரிழந்தார்.

"மாணவன், நண்பர்களுடன் யாழ்ப்பாணத்திலிருந்து மோட்டார் சைக்கிளில் தென்னிலங்கை நோக்கிப் பயணித்தபோது, டிப்பர் வாகனத்துடன் மோதுண்டு விபத்து ஏற்பட்டுள்ளது. விபத்தில் சம்பவ இடத்திலேயே மாணவன் உயிரிழந்துள்ளார்" என்று பொலிஸார் தெரிவித்தனர்.

சம்பவம் தொடர்பில் பூநகரிப் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

### சிவாஜிலிங்கம்...

நேற்றுக் காலை 9.30 மணியளவில் வல்வெட்டித்துறையிலுள்ள எம்.கே.சிவாஜிலிங்கத்தின் வீட்டுக்குச் சென்ற, பொலிஸார், அவரைக் கைது செய்து வல்வெட்டித்துறை பொலிஸ் நிலையத்துக்கு கொண்டு சென்றனர்.

2018ஆம் ஆண்டு மாவீரர் நாளை அனுசரித்தது தொடர்பாக, பருத்தித்துறை நீதிமன்றில் நடைபெற்று வரும் வழக்கு விசாரணைக்கு சமூகமளிக்காத நிலையில், பருத்தித்துறை நீதிவானின் கட்டளையின் பேரில், எம்.கே.சிவாஜிலிங்கம் கைது செய்யப்பட்டிருந்தார்.

எம்.கே.சிவாஜிலிங்கம் வல்வெட்டித்துறை பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைக்கப்பட்டு விசாரணை செய்யப்பட்ட பின்னர், பருத்தித்துறை நீதிமன்ற நீதிவான் முன்பாக, பொலிசாரால் நிறுத்தப்பட்டார்.

இதையடுத்து, எம்.கே.சிவாஜிலிங்கத்தை எச்சரிக்கை செய்த பருத்தித்துறை நீதிவான் அவரை பிணையில் செல்ல அனுமதித்தார்.

### பாடசாலைகள்...

வேண்டும் எனவும் கல்வி அமைச்சு அறிவித்துள்ளது.

தரம் 5 முதல் தரம் 11 வரையான மாணவர்களுக்கு காலை 7.30 மணி முதல் 1.30 மணி வரையும், தரம் 13 மாணவர்களுக்காக காலை 7.30 மணி முதல் பிற்பகல் 3.30 மணி வரையும் கல்வி நடவடிக்கைகள் இடம்பெறும் எனக் கல்வி அமைச்சு தெரிவித்துள்ளது.

பாடசாலைகளின் புதிய கால அட்டவணையின் பிரகாரம் தமது கற்பித்தல் நடவடிக்கைகளை நிறைவு செய்ததன் பின்னர் ஆசிரியர்கள் வீடுகளுக்கு செல்ல முடியும் எனவும் கல்வி அமைச்சு அறிவித்துள்ளது.

அதிபர்களின் பரிந்துரைகளின் அடிப்படையிலேயே, ஆசிரியர்கள் பாடசாலைகளுக்கு பிரவேசிக்கவும் வெளியேறவும் வேண்டும் என கல்வி அமைச்சு தெரிவித்துள்ளது.

இந்தக் கருத்துகளைக் கருத்தில்கொண்டே எதிர்கால நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படும் எனவும் அவர் கூறியுள்ளார்.

ஈழநாடு
Eelanadu ඊළනාඩු
06.07.2020 ஞாயிற்றுக்கிழமை

**“ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம் உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்”**
- யோகர் சுவாமிகள்.

gmail:- eelanaduweekly@gmail.com
தொலைபேசி : 021 492 7805

# இந்தியா யாரின் பக்கம்?

தேர்தல் என்றால் அனைத்தும் நினைவுக்கு வருவதுண்டு. ஐந்து வருடங்களாக மறந்து போன விடயங்கள் மேடைகளில் நினைவூட்டப்படும். அப்படித்தான் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன், இந்தியா தமிழர்களின் பக்கம் இருப்பதாக தெரிவித்திருக்கின்றார். திருகோணமலையில் இடம்பெற்ற தேர்தல் பிரசாரக் கூட்டமொன்றிலேயே இதனை அவர் தெரிவித்திருக்கின்றார்.

2015 இல் ஆட்சி மாற்றம் இடம்பெற்றதைத் தொடர்ந்து, இந்தியா தொடர்பில் சம்பந்தன் எந்தவொரு அக்கறையையும் வெளிப்படுத்தவில்லை. தமிழ் மக்களின் அரசியல் தீர்வை வெளியாருடைய தலையீடுகளின்றியே அடைய முடியுமென்று நம்பும் ஒருவராகவே செயற்பட்டிருந்தார். ரணில் - மைத் திரி காலத்தில் இடம்பெற்ற கூட்டமைப்பின் ஒவ்வொரு நடவடிக்கைகளும் இதற்கு எடுத்துக்காட்டு.

சம்பந்தன் எதிர்கட்சித் தலைவராக இருந்த காலத்தில் ஒரு முறைகூட புதுடில்லியை அணுகவில்லை. புதுடில்லியை அணுகினால் சிங்களவர்கள் கோபிப்பார்கள் என்பதே சம்பந்தனின் அரசியல் புரிதலாக இருந்தது. அனைத்து நாடாளுமன்ற உறுப்பினர்களும் ஒன்றாக புதுடில்லிக்குச் செல்வோம் - அங்குள்ள ஊடகங்களோடு பேசுவோம், புத்திஜீவிகளோடு போசுவோம் என்று கூட்டமைப்புக்குள் சிலர் வற்புறுத்திய போது, அதனை சமபந்தன் கடுமையாக எதிர்த்திருந்தார். நாங்கள் ஒரு புதிய அரசியல் யாப்பிற்காக உழைத்துக் கொண்டிருக்கின்றோம் என்று இந்த நேரத்தில் புதுடில்லிக்கு சென்றால் அந்த முற்சிகள் பாதிப்படையும் என்று அந்தக் கோரிக்கையை நிராகரித்திருந்தார். இன்று, அதே சம்பந்தன் இந்தியா தமிழரின் பக்கமாக இருப்பதாகவும் மோடியுடன் பேசிக் கொண்டிருப்பதாகவும் கூறுகின்றார். புதுடில்லிக்குச் சென்றால் தீர்வு முயற்சிகள் பாதிக்கப்படும் என்று எண்ணும் சம்பந்தனுக்கு மோடியால் எவ்வாறு உதவமுடியும்?

இந்தியா ஒரு பிராந்திய சக்தி. இலங்கையின் உடனடி அயல்நாடு. தெற்காசியாவைப் பொறுத்தவரையில் எவர் விரும்பினாலும் விரும்பாவிட்டாலும் தன்னுடைய நலன்களுக்காக அயல் நாடுகளில் தலையீடு செய்யும் ஆற்றலை இந்தியா கொண்டிருக்கின்றது. இலங்கை தமிழர் பிரச்னையை ஓர் அரசியல் பிரச்னையாக காணும் ஒரேயொரு நாடும் இந்தியா மட்டும்தான். இதெல்லாம் எந்தளவிற்கு உண்மையோ அந்தளவிற்கு இந்தியா தனது நலன்களை புறம்தள்ளி தமிழர் விவகாரத்தை அணுகாது என்பதும் உண்மையே. இதுதான் இதுவரையான அரசியல் பட்டறிவு.

தமிழர் பக்கமாக இந்தியா நிற்க வேண்டுமென்றால் தமிழரும் இந்திய நலன்களை விளங்கிக்கொண்டு அதற்கேற்ப காய்களை நகர்த்த வேண்டும். ஆனால் கடந்த ஒரு தசாப்த கால கூட்டமைப்பின் தலைமைத்துவம் அதனைச் சரியா கச் செய்யவில்லை என்னும் புரிதல் தமிழ்ப் பரப்பில் காணப்படுகின்றது. இது போக, இந்தியாவை தேவைக்கு அணுகும் போக்கும் தமிழர் தலைமையிடம் இருக்கும் ஒரு குறைபாடாகும். பிரச்சினையென்றால் இந்தியா தொடர்பில் பேசுவதும் இல்லாவிட்டால் அமைதியாக இருக்கும் போக்கொன்றும் தமிழர் பக்கத்திலுள்ள குறைபாடாகும். இவ்வாறான குறைபாடுகள் நீடிக்கும் வரையில் இந்தியா உண்மையிலேயே எவர் பக்கம் நிற்கின்றது என்பதை எவராலும் அனுமானிக்க முடியாது.

# தேர்தல்கள் ஆணைக்குழுவினர் நேற்று மட்டக்களப்புக்கு விஜயம்

மட்டக்களப்பு, ஜூலை 06

தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைவர் மஹிந்த தேசப்பிரிய, அதன் உறுப்பினர் பேராசிரியர் ரட்ணஜீவன் கூல் ஆகியோர் நேற்று மட்டக்களப்பு மாவட்டத்திற்கு சென்றனர்.

மட்டக்களப்பு மாவட்டத்தில் நிர்மாணிக்கப்பட்டுள்ள மாவட்ட உதவி தேர்தல்கள் ஆணையாளருக்கான உத்தியோகபூர்வ வாசஸ்தலத்தை அவர்கள் இணைந்து திறந்து வைத்தனர்.

நாடளாவிய ரீதியில் யாழ்ப்பாணம் , மன்னார் ,கிளிநொச்சி , கொழும்பு ஆகிய மாவட்டங்களை தவிர்ந்து ஏனைய மாவட்டங்களில் தேர்தல்கள் ஆணையாளர்களுக்கான உத்தியோகபூர்வ வாசஸ்தலம் இருக்கின்ற நிலையில் மட்டக்களப்பு மாவட்டத்திற்கான தேர்தல்கள் ஆணையாளருக்கான உத்தியோக பூர்வ வாசஸ்தலம் நிர்மாணிக்கப்பட்டு நேற்று திறந்து வைக்கப்பட்டுள்ளது



இந்நிகழ்வில் தேர்தல்கள் ஆணையாளர் நாயகம் சமன் ரத்நாயக்க, முன்னாள் தேர்தல்கள் ஆணையாளர் நாயகம் எம் எம் மொகமட், மாவட்ட அரசாங்க அதிபர் கலாமதி பத்மராஜா மாவட்ட சிரேஷ்ட போலிஸ் அத்தியட்சகர் எம் என் .மெண்டிஸ், மற்றும் தேர்தல்கள் ஆணைக்குழுவின் மேலதிக ஆணையாளர்கள், பதவி நிலை உத்தியோகத்தர்கள் என பலர் கலந்துகொண்டனர்.

# தேர்தல் நாளில் கடமையில் 5,000 கண்காணிப்பாளர்கள்

கொழும்பு, ஜூலை 06

பொதுத் தேர்தலை முன்னிட்டு தேர்தல் வன்முறை கண்காணிப்பு மத்திய நிலையம் 5 ஆயிரத்துக்கும் அதிகமான உறுப்பினர்களை கண்காணிப்பு நடவடிக்கைகளில் நியமிக்கவுள்ளது என்று அதன் தேசிய ஒருங்கிணைப்பாளர் மஞ்சுள கஜநாயக்க தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பாக தேர்தல் வன்முறை கண்காணிப்பு மத்திய நிலையம் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

ஓகஸ்ட் மாதம் 5 ஆம் திகதி இடம்பெற இருக்கும் நாடாளுமன்ற தேர்தலை முன்னிட்டு தேர்தல் வன்முறை கண்காணிப்பு மத்திய நிலையம் 5 ஆயிரத்துக்கும் அதிக உறுப்பினர்களை கண்காணிப்பு நடவடிக்கைகளில் நியமிக்க நடவடிக்கை எடுத்திருக்கின்றது. இதன்போது கள கண்காணிப்பு, மாவட்ட ஒருங்கிணைப்பு, நடமாடும் கண்காணிப்பு மற்றும் வாக்கு எண்ணும் கண்காணித்தல் என்ற பிரிவுகளின் கீழ் இந்த கண்காணிப்பாளர்கள் கடமையில் ஈடுபடுத்தப்படுவார்கள்.

அதன் பிரகாரம் தேர்தல் தொகுதிகளின் அடிப்படையில் கள கண்காணிப்பாளர்களாக 160 பேரும் மாவட்ட ஒருங்கிணைப்பாளர்களாக 25 பேரும் நடமாடும் கண்காணிப்பாளர்களாக 100 பேரும் கண்காணிப்பு நடவடிக்கையில் கலந்துகொள்வார்கள். அத்துடன் வாக்கு எண்ணும் மத்திய நிலையங்களில் கணகாணிப்பாளர்கள் 500 பேர்வரை ஈடுபடுத்தப்படுவர். வாக்களிப்பு தினத்தில் மாத்திரம் 3ஆயிரம் பேர்வரை கண்காணிப்பு நடவடிக்கைகளில் ஈடுபடுத்த இருக்கின்றோம்.

அத்துடன் இம்முறை தேர்தல் கண்காணிப்பு கடமைக்கு விசேட திறமையுள்ள 100 பேர் இணைத்துக் கொண்டிருக்கின்றமை விசேட அம்சமாகும். இவர்கள் அனைவருக்கும் தேவையான பயிற்சிகளை வழங்கும் நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டிருக்கின்றன.

இதன் பிரகாரம் கண்காணிப்பாளர்கள் இரண்டு குழுவினருக்கு ஆரம்பகட்ட பயிற்சிகள் நேற்று ஞாயிற்றுக்கிழமையும் நேற்று முன்தினம் சனிக்கிழமையும் பயிற்சிகள் வழங்கப்பட்டன.

# சிங்கள மக்களை பகைத்து இந்நாட்டில் வாழ முடியாது

## இதுவே யதார்த்தம் என்கிறார் மனோ

சிங்கள மக்களை பகைத்துக் கொண்டு நாட்டில் வாழ முடியாது. ஆகையால் தமிழ் மக்கள் அரசியலில் பலம் பொருந்தியவர்களாக இருக்க வேண்டும் என்று தமிழ் முற்போக்கு கூட்டணியின் தலைவரும் ஐக்கிய மக்கள் சக்தியின் கொழும்பு மாவட்ட வேட்பாளருமான மனோகணேஷன் தெரிவித்தார்.

கொழும்பில் இன்று இடம்பெற்ற நிகழ்வில் கலந்துகொண்டு கருத்துரைக்கையில் இதனைத் தெரிவித்த அவர் மேலும் கூறுகையில், இலங்கை பல்லின சமூகம் வாழும் பெரும்பான்மை நாடு. எந்த கட்சி ஆட்சி அமைத்தாலும் அக்கட்சி பெரும்பான்மை சமூகத்துக்கு முன்னுரிமை வழங்குவது சாதாரண ஒரு விடயமாகும். இதனை குறை கூற முடியாது. ஏனெனில் சிங்கள மக்களே பெரும்பான்மையின் சமூகமாக வாழ்கிறார்கள்.

இடம்பெறவுள்ள பொதுத்தேர்தல் தமிழ் பேசும் மக்களின் உரிமைகளையும், அரசியல் அந்தஸ்த்தினையும் பாதுகாக்கும்ஒரு தேர்தலாகவே காணப்படுகிறது. கடந்த காலங்களை காட்டிலும் நாட்டில் தமிழ் பேசும் மக்களின் நிலை தற்போது எந்த மட்டத்தில் உள்ளது என்பதை புதிதாக எடுத்துரைக்க வேண்டிய தேவை கிடையாது.

சிங்கள மக்களை பகைத்துக் கொண்டு நாட்டில் வாழ முடியாது. இதுவே யதார்த்தமான உண்மை இதற்காக எமது உரிமையை விட்டுக் கொடுக்க முடியாது. இதற்கு தமிழ் பேசும் மக்கள் அரசியலில் பலம் மிக்கவர்களாக இருக்க வேண்டும். ஏனைய மாவட்டங்களை காட்டிலும் கொழும்பு மாவட்டத்தில் தமிழ் மொழி பேசும் ஒருவர் நாடாளுமன்றத்திற்கு தெரிவு செய்து ஒரு அமைச்சராக பதவி வகிப்பது முக்கியமானதொரு விடயாகும் என்றும் அவர் வலியுறுத்தினார்.

செய்திகள்

# மிலேனியம் சவால் ஒப்பந்தத்தை ஏற்கமுடியாது என்று அறிவிப்போம்

## மஹிந்த ராஜபக்ஷ திட்டவட்டம்



கொழும்பு, ஜூலை 06

மிலேனியம் சவால் (எம். சி. சி.) ஒப்பந்தத்தில் உள்ளடக்கப்பட்டுள்ள நிபந்தனைகளால் ஒப்பந்தத்தை ஏற்க முடியாது என்ற நிலைப்பாட்டை அமெரிக்காவிற்கு தெரிவிக்கவுள்ளதாக பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

முல்கிரிகல பிரதேசத்தில் நேற்று முன்தினம் சனிக்கிழமை இடம்பெற்ற ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் தேர்தல் பிரசார கூட்டத்தில் கலந்துக் கொண்டு உரையாற்றுகையில் இதனைத் தெரிவித்த பிரதமர் மேலும் கூறுகையில்,

கடந்த ஐந்து வருட காலத்தில் நான் முன்னெடுத்த அபிவிருத்தி பணிகள் திசைத்திருப்பி விடப்பட்டன. இதற்கு பிரதான காரணம் இரண்டு அரச தலைவர்களுக்கும் இடையிலான முரண்பாடுகள். அரசியல் பழிவாங்களுக்காக கொழும்பு துறைமுக நகரம் 2 வருட காலத்திற்கு இடை நிறுத்தம் செய்யப்பட்டது. பின்னர் ஒப்பந்தம் திருத்தியமைக்கப்பட்டு அபிவிருத்தி நிர்மாண பணிகள் முன்னெடுக்கப்பட்டன.

அம்பாந்தோட்டை துறைமுகம், மற்றும் மத்தளை விமான நிலையம் இளைஞர் யுவதிகளுக்கு தொழில் வாய்ப்பை பெற்றுக் கொடுக்கும் விதமாக நிர்மாணிக்கப்பட்டது.

ஆனால் கடந்த அரசாங்கம் எங்களை அவமதிப்பதாக கருதி விமான நிலையத்தை நெற்களஞ்சியமாக மாற்றியமைத்தது. இதன் தாக்கத்தை மக்களே எதிர்க் கொண்டார்கள்.

30 வருட கால யுத்தம் முடிவிற்கு கொண்டு வரப்பட்டதை தொடர்ந்து அபிவிருத்தி பணிகள் அங்கு துரிதமாக முன்னெடுக்கப்பட்டன. கடந்த அரசாங்கம் நாட்டின் அபிவிருத்திகளை அரசியல் காரணிகளினால் இடை நிறுத்தியது. இடை நிறுத்தம் செய்யப்பட்ட அபிவிருத்தி பணிகள் மீள் ஆரம்பிக்கப்பட வேண்டும். பொதுத்தேர்தலை தொடர்ந்து ஜனாதிபதியின் கொள்கைளை பிரதிநிதித்துவப்படுத்தும் அரசாங்கம் தோற்றம் பெற வேண்டும்.

ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவர் சஜித் பிரேமதாஸ மீது ஜனாதிபதி தேர்தல் காலத்தில் மக்கள் வைத்திருந்த நம்பிக்கை தற்போது இல்லாமல் போயுள்ளது. மக்களின் ஆணையைப் பெறுவதற்கு இவரிடம் எந்த கொள்கையும் கிடையாது. மக்களையும்.

நாட்டையும் நேசிக்கும் தரப்பினரை நாடாளுமன்றத்திற்கு தெரிவு செய்து அனுப்புங்கள்.

சர்வதேச நாடுகளுடன் ஒப்பந்தம் செய்துகொள்ளும் போது, மிகவும் கவனமாக இருக்க வேண்டும். ஒப்பந்தம் செய்துக் கொண்டதன் பின்னர் இடைநடுவில் ஒருதரப்பினர் விலக முடியாது. ஒப்பந்தம் தொடர்பில் ஆராய்வதற்கு மீளாய்வு குழுவை நியமித்தோம். தற்போது அறிக்கை கிடைக்கப் பெற்றுள்ளது. ஒப்பந்தத்தில் குறிப்பிடப்பட்டுள்ள நிபந்தகைகள் ஏற்றுக் கொள்ள முடியாத காரணத்தினால் ஒப்பந்தத்தை நிராகரிக்கும் நிலைப்பாட்டில் உள்ளோம். இதனை அமெரிக்க எம். சி. சி. நிறுவனத்திற்கும் தெரிவிக்கவுள்ளோம் என தெரிவித்துள்ளார்.

# நவாலி தேவாலய படுகொலை இறந்தவர்கள் விபரம் திரட்டல்

நவாலி சென். பீற்றர் தேவாலயத்தில் இராணுவ விமானங்களின் குண்டு வீச்சுத் தாக்குதலில் படுகொலையான 147 பொதுமக்களின் 25 ஆவது ஆண்டு நினைவுதினம் எதிர்வரும் 9 ஆம் திகதி கடைப்பிடிக்கப்படவுள்ளது.

இதனை நினைவுகூரும் முகமாக 25 ஆவது ஆண்டு நினைவுக்கல் திரை நீக்கம் செய்து வைக்கப்படவுள்ளது.

எனவே, இந்த தேவாலயத்தில் 09.07.1995 அன்று இடம்பெற்ற தாக்குதலில் படுகொலையானவர்களின் முழுப்பெயர், பதவி, பிறந்த திகதி, முகவரி போன்ற விபரங்கள் தந்துதவுமாறு பங்குத் தந்தை வண. அலின் கருணாகரன் கேட்டுள்ளார்.

உள்நாட்டிலோ அல்லது வெளிநாட்டிலோ வதியும் உறவுகள் இன்று திங்கட்கிழமை பங்குத் தந்தையிடம் வழங்கி உதவலாம். விரைந்து இந்த விபரங்களை தந்துதவுமாறு கேட்கப்பட்டுள்ளது.




கொழும்பு - வெள்ளவத்தையில் நேற்று புடவை வர்த்தக நிலையம் ஒன்று தீப்பற்றியதால் காலி வீதி மூடப்பட்டது...

# பொலிஸ், இராணுவம் இணைந்து கிளிநொச்சியில் சுற்றிவளைப்பு!



கிளிநொச்சி, ஜூலை 06

கிளிநொச்சி கண்டாவளை பிரதேசத்தில் சுமார் 400 வீடுகள் வரை சுற்றிவளைக்கப்பட்டு தேடுதல் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

நேற்றுமுன்தினம் சனிக்கிழமை அதிகாலை நான்கு மணி முதல் காலை எட்டு மணி வரை இத் தேடுதல் மேற்கொள்ளப்பட்டது.

சட்டவிரோத செயற்பாடுகள், குற்றச் செயல்களில் ஈடுப்பட்டவர்கள், போன்ற பல்வேறு சமூக விரோத செயற்பாடுகளின் பொருட்டு இத் தேடுதல் மேற்கொள்ளப்பட்டதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இதன்போது சந்தேகநபர் ஒருவர் கைது செய்யப் பட்டார். அத்துடன் மோட்டார் சைக்கிள் ஒன்றும் பொலிஸாரால் கைப்பற்றப்பட்டுள்ளது.

சுமார், 280 இற்கும் மேற்பட்ட பொலிஸாரும், இராணுவத்தினரும் இணைந்து இத்தேடுதல் நடவடிக்கையில் ஈடுப்படுத்தனர்.

# மன்னாரில் தேவாலயத்துக்குள் நுழைந்த மர்மநபரால் அச்சம்!

மன்னார், ஜூலை 06

மன்னார் பேசாலையில் புனித வெற்றிநாயகி தேவாலயத்துக்குள் நுழைந்த இனந்தெரியாத நபரால் பெரும் பரபரப்பு ஏற்பட்டுள்ளது. இதையடுத்து அவர் குறித்து புலனாய்வுப் பிரிவினரும் பொலிஸாரும் விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.

இந்தச் சம்பவம் நேற்று முன்தினம் சனிக்கிழமை இடம்பெற்றுள்ளது.

இந்தச் சம்பவம் குறித்து மேலும் அறிய வருவதாவது

சந்தேகத்துக்கு இடமான முறையில் தேவாலயத்துக்குள் நுழைந்த அந்த நபரை பெண் இடைமறித்து விசாரித்துள்ளார். அவர் அளித்த பதில்கள் அவருக்கு சந்தேகத்தை ஏற்படுத்தின. இதையடுத்து அந்தப் பெண் ஆலயத்தின் உதவி பங்குத்தந்தையின் கவனத்திற்கு கொண்டு சென்றார்.

உதவி பங்குத்தந்தை பேசாலை புனித வெற்றிநாயகி ஆலய பங்குத்தந்தை அருட்தந்தையின் கவனத்திற்கு கொண்டு சென்றார்.

இந்த நிலையில் நேற்று முன்தினம் சனிக்கிழமை மாலை 5.30 மணியளவில் பேசாலை பங்குத்தந்தை பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்தார். விசாரணைகளை ஆரம்பித்த பொலிஸார் தேவாலயத்தில் பொருத்தப்பட்டு இருந்த சி.சி.ரி.வி காட்சிகளைப் பார்வையிட்டனர்.



தற்போது பேசாலை புனித வெற்றிநாயகி ஆலயம் உட்பட பேசாலை, தலைமன்னார் ஆகிய பகுதிகளில் இராணுவம் மற்றும் பொலிஸார் பாதுகாப்பு நடவடிக்கைகளை அதிகரித்துள்ளனர்.

# தனியாகச் சென்ற பெண்ணிடம் 9 பவுண் தாலிக்கொடி அபகரிப்பு

தனியாக வீதியில் நடந்து சென்ற வயோதிப பெண்ணின் 9 பவுண் தாலிக்கொடியை திருடர்கள் அறுத்துச் சென்றுள்ளனர்.

இந்த சம்பவம் நேற்று மாலை யாழ்ப்பாணம் - கொக்குவில் பொற்பதி பகுதியில் இடம்பெற்றுள்ளது.

இந்த சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது,

கொக்குவில் பொற்பதி பகுதியில் தனியாக வீதியில் நடந்து சென்ற வயோதிபப் பெண்ணைப் பின்தொடர்ந்து வந்த இரு மர்ம நபர்கள், அவர் கழுத்தில் அணிந்திருந்த 9 பவுன் பெறுமதியுடைய தாலிக்கொடியை அறுத்துச் சென்றனர்.

இந்த சம்பவம் தொடர்பில் கோப்பாய் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டுள்ளது.

இது தொடர்பான விசாரணைகளை கோப்பாய் பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர்.

செய்திகள்

# இணைந்த வடக்கு, கிழக்கில் சமஷ்டி தீர்வே எங்கள் நோக்கு

## மட்டக்களப்பில் விக்னேஸ்வரன் முழக்கம்

மட்டக்களப்பு, ஜூலை 06

வடக்கு- கிழக்கு மாகாணங்கள் இணைப்பு மற்றும் சமஷ்டி அரசமைப்பு தொடர்பாக சர்வதேச மேற்பார்வையில் இந்த மாகாணங்களில் பொது வாக்கெடுப்பு நடத்தப்பட வேண்டும் என்று வலியுறுத்தியுள்ளார் வடக்கின் முன்னாள் முதலமைச்சரும் - தமிழ் மக்கள் தேசியக் கூட்டணியின் தலைவருமான சி.வி. விக்னேஸ்வரன்.

நேற்று மட்டக்களப்பில் இடம்பெற்ற மக்கள் சந்திப்பு ஒன்றிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

மேலும், "தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு எடுத்த சில பிழையான தீர்மானங்களினால்தான் இன்று நாங்கள் பல்வேறு துன்பங்களுக்கு முகம் கொடுத்து வருகின்றோம். எனவே வீட்டிலிருந்து விடுபட்டு எங்களுடைய மீன் சின்னத்திற்கு வாக்களிக்க அனைவரும் முன்வாருங்கள்.

மேலும் எங்களுடைய கட்சி அனைவரையும் ஒன்றிணைத்து செல்லும் முழுமையானதொரு சிந்தனையுடன் பயணிக்க இருக்கின்றது. அத்துடன் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு காலத்துக்கு காலம் எண்ணங்களை மாற்றிக்கொண்டு இருக்கின்றது. ஆகவே, எமது பகுதிகளில் அபிவிருத்திகளை மேற்கொள்வதற்காக நாங்கள்



புலம்பெயர் அமைப்புகளுடன் இணைந்து பல்வேறு நடவடிக்கைகளை முன்னெடுக்க தீர்மானித்துள்ளோம்.

தன்னாட்சி ரீதியான, அரசியல் ரீதியான தீர்வைப் பெற்றுக்கொள்வதற்கு நாங்கள் நாடாளுமன்றம்சென்று அதனை செய்வோம். பெரும்பான்மையினர் ஒருபோதும் எங்களின் பிரச்சனைகளுக்கு தீர்வை வழங்கமாட்டார்கள்.

ஆகவே? வடக்கு- கிழக்கு மக்களிடம் உங்களுக்கான தீர்வு எதுவாக இருக்கவேண்டும் என்று நாங்கள் கேட்போம். ஐ.நாவின் கண்காணிப்பில் வடக்கு -கிழக்கு மக்களுக்கு எவ்வாறான தீர்வு வேண்டும் என்பதை அறிந்து அது தொடர்பான நடவடிக்கைகளை நாங்கள் முன்னெடுக்க ஆரம்பித்துள்ளோம்" - என்றும் கூறினார்.

# கைக்குழந்தையுடன் நடந்து சென்ற பெண்ணை மோதி தள்ளியது லொறி

## - திருமலையில் 3 விபத்துக்களில் 9 பேர் படுகாயம்! -

திருகோணமலையில் வெவ்வேறு இடங்களில் ஏற்பட்ட மூன்று விபத்துகளில் 9 பேர் படுகாயமடைந்தனர்.

திருகோணமலை - புல்மோட்டை பிரதான வீதியில் இறக்க கண்டி பகுதியில் முச்சக்கர வண்டி வீதியை விட்டு விலகி மரத்துடன் மோதி விபத்துக்குள்ளானதில் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த மூன்று சிறுவர்கள் உட்பட ஆறு பேர் படுகாயமடைந்தனர் என்று குச்சவெளி பொலிஸார் தெரிவித்தனர்.

கும்புறுப்பிட்டி, 5 ஆம் வட்டாரத்தைச் சேர்ந்த முச்சக்கர வண்டி சாரதியான பீ.மதனகுமார் 32 வயது அவரது சகோதரி மற்றும் அவரது மனைவி, மூன்று பிள்ளைகளே படுகாயமடைந்தவர்கள் எனத் தெரிய வருகின்றது.

அதேவேளை, மொரவெவ பொலிஸ் பிரிவிற்குட்பட்ட நாமல்வத்த பகுதியில் மோட்டார் சைக்கிள் மோதியதில் நான்கு வயது சிறுமி பலத்த காயங்களுக்கு இலக்கான நிலையில் முதலில் மகாவ பிரதேச வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டு பின்னர், திருகோணமலை பொது வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டார்.

திருகோணமலை - மட்டக்களப்பு பிரதான வீதியில் கைக்குழந்தையுடன் நடந்து சென்ற பெண்ணை லொறி மோதித் தள்ளியதில் 32 வயதான பெண்ணும் அவரது 11 மாத குழந்தையும் படுகாயமடைந்தனர். இந்த விபத்து சங்கம பகுதியில் இடம்பெற்றது.

இவ்விபத்துக்கள் மூன்றுடனும் தொடர்புடைய சாரதிகள் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

# பெண்ணின் கையைப் பிடித்த இளைஞர் கம்பி எண்ணுகிறார்

திருகோணமலை, ஜூலை 06

டென்மார்க் நாட்டு பெண் சுற்றுலா பயணியின் கையைப் பிடித்த இளைஞரைப் பொலிஸார் கைது செய்துள்ளனர்.

இரத்தினபுரியைச் சேர்ந்த 38 வயது நபரே இவ்வாறு பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

திருகோணமலையில் நேற்று முன்தினம் இடம்பெற்ற இந்தச் சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது,

டென்மார்க் நாட்டிலிருந்து சுற்றுலா பயணியாக திருகோணமலைக்கு பெண் ஒருவர் வந்துள்ளார். அவர் ஹோட்டல் ஒன்றில் தங்கியிருந்தபோது, அங்கு தங்கியிருந்த நபர், பாலியல் ரீதியாக அந்தப் பெண்ணின் கையைப் பிடித்துள்ளார்.

அதிர்ச்சியடைந்த அந்தப் பெண் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்தார். இதையடுத்து திருகோணமலை துறைமுகப் பொலிஸார் அவரைக் கைது செய்தனர்.

# உகந்தை முருகன் பெருந்திருவிழா சிரமதானப் பணிகள் முன்னெடுப்பு

வரலாற்றுப் பிரசித்தி பெற்ற அம்பாறை உகந்தைமலை முருகன் ஆலயத்தின் பெருந்திருவிழா எதிர்வரும் 21 ஆம் திகதி ஆரம்பமாகவுள்ளது. இதையொட்டி கோயில் சுற்றுப்புறத்தில் சிரமதானப் பணிகளில் பல திணைக்களங்களும் நிறுவனங்களும் ஈடுபட்டுள்ளன.

ஆலையடிவேம்பு, திருக்கோவில், காரைதீவு, கல்முனை, நாவிதன்வெளி, களுவாஞ்சிக்குடி போன்ற பிரதேச செயலகங்களும் இப்பணியில் இணைந்து செயற்பட்டு வருகின்றன.

ஆலையடிவேம்பு பிரதேச செயலாளர் வி.பபாகரன், தலைமையில் கடந்த இரு நாட்களாக நடைபெற்ற சிரமதானப் பணியில் பிரதேச செயலகத்தின் உத்தியோகத்தர்கள் பலர் கலந்துகொண்டனர்.

யாத்திரிகர்கள் தங்குவதற்கு வசதியாக, ஆலய வளாகத்தில் இருந்த பற்றைகள், குப்பைகள் அகற்றப்பட்டதுடன் நீராடுவதற்கான கிணறுகளும் சுத்தப்படுத்தப்பட்டன.

உகந்தைமலை முருகன் ஆலய உற்சவம் எதிர்வரும் ஜூலை மாதம் 21ஆம் திகதி ஆரம்பமாகி, ஒகஸ்ட் மாதம் 04 ஆம் திகதிவரை இடம்பெறவுள்ளது.

வெளி மாவட்ட பக்தர்கள் வழிபடுவதற்கு அனுமதி மறுக்கப்பட்ட நிலையில், அம்பாறையைச் சேர்ந்தவர்கள் மாத்திரம், நாள் ஒன்றுக்கு, 200 பேர் என்ற ரீதியில், நான்கு வேளைகளில் ஆலயத்தினுள் அனுமதிக்கப்படவுள்ளனர்.

# அம்பாறையின் அபிவிருத்திக்கு விசேட படையணி அமைப்போம்

## ஆலையடிவேம்பு பிரசாரத்தில் சஜித் உறுதி

அம்பாறை, ஜூலை 06

அம்பாறை மாவட்டத்தின் அபிவிருத்திக்காக பிரதமரின் நேரடி கண்காணிப்பின் கீழ் விசேட படையணி உருவாக்கப்படும். இதன் மூலம் பல்வேறு அபிவிருத்தி பணிகள் முன்னெடுக்கப்படும் என்று உறுதியளித்துள்ளார் ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவர் சஜித் பிரேமதாஸ.

ஐக்கிய மக்கள் சக்தியின் பிரசாரக்கூட்டம் நேற்று முன்தினம் ஆலையடிவேம்பு கலாசார மண்டபத்தில் இடம்பெற்றது.

இதன்போது உரையாற்றிய சஜித் பிரேமதாஸ, "அம்பாறை மாவட்டத்தில் தமிழ் மக்கள் சார்பில் போட்டியிடும் சகோதரர் வினோகாந் மாவட்டத்தின் சகல கிராமங்களின் தேவைகள் தொடர்பில் நன்கறிந்தவர். ஆகவே, அவர் மூலம் அறிந்து கொண்ட விடயங்கள் யாவும் எதிர்வரும் தேர்தலின் பின்னர் நிறைவேற்றப்படும்.

மக்கள் கவலை கொள்ள வேண்டாம். எதிர்வரும் 5 ஆம் திகதிக்கு பின் எமது ஆட்சி அமையும். அதன் பின்னர் சகல மக்களின் தேவைப்பாடுகளும் பூர்த்தி செய்யப்படும்.

அம்பாறை மாவட்டத்தில் நீர்ப்பாசன வசதியின்றி விவசாயம் செய்ய முடியாதிருக்கும் 25 ஆயிரத்துக்கும் மேற்பட்ட காணிகளை விவசாய செய்கைக்காக பெற்றுக்கொடுப்பேன். இதற்காக கஞ்சிகுடியாறு, காஞ்சிரங்குடா போன்ற குளங்களை அபிவிருத்தி செய்து தருவேன்.

அம்பாறை மாவட்டத்தில் 134 வீட்டுத்திட்டங்களை நான் ஆரம்பித்தேன். இதில் 25 வீட்டுத்திட்டங்களை கையளித்துள்ளேன். கடந்த ஜனாதிபதி தேர்தலின்



பின்னர் சகல வீட்டுத்திட்டங்களும் இலங்கை முழுவதும் நிறுத்தப்பட்டது. அமையவுள்ள புதிய அரசாங்கத்தில் நிறுத்தப்பட்ட சகல வீட்டுத்திட்டங்களும் ஆரம்பிக்கப்படும் - என்றார்.

செய்திகள்

# த.தே.ம. முன்னணி அலுவலகத்தில் இராணுவம் சுற்றிவளைப்பு தேடுதல்

## கரும்புலிகளை நினைவேந்துவதை தடுக்கும் முயற்சியாம்



யாழ்ப்பாணம், ஜூலை 06

தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் கொக்குவில் அலுவலகம் நேற்று இராணுவம், பொலிஸாரால் முற்றுகையிடப்பட்டு தேடுதல் நடவடிக்கைக்கு உட்படுத்தப்பட்டது.

நேற்று தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பின் கரும்புலிகள் நாள் ஆகும். இந்த நாளை முன்னணியின் அலுவலகத்துக்குள் நடைபெறாமல் தடுக்கும் நோக்கிலேயே இந்த முற்றுகையும் தேடுதலும் இடம்பெற்றதாக முன்னணியின் தலைவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தெரிவித்தார்.

தமது அலுவலகத்துக்கு வந்த யாழ். பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி உள்ளிட்டவர்கள் கரும்புலி நினைவேந்தல் நடத்தக் கூடாது என்று எங்களையும் எச்சரித்து சென்றார் என்றும் அவர் குறிப்பிட்டார்.

மேலும், அப்பகுதியில் சுமார் 50 இற்கும் மேற்பட்ட இராணுவத்தினரும் பொலிஸாரும் குவிக்கப்பட்டு இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது.

# யாழ். நகர லயன்ஸ் கழகத்தின் ஏற்பாட்டில் இரத்த தான முகாம்



யாழ். நகர லயன்ஸ் கழகத்தினால் பருத்தித்துறை வீதியில் அமைந்துள்ள இ. சிற்றி ஆங்கில கல்லூரியில் 4 ஆவது புதிய நிர்வாக பதவி ஏற்பதனை முன்னிட்டு இரத்ததான முகாம் நேற்று இடம்பெற்றது.

நகர லயன்ஸ் கழக தலைவர் லயன் ப. ஐங்கரன் தலைமையில் நடைபெற்ற இந் நிகழ்வில் நூற்றுக்கணக்கான இளைஞர், யுவதிகள் பங்கேற்று இரத்த தானம் செய்தனர்.

இந்த இரத்த தான முகாமிற்கு லயன்ஸ் கழகத்தின் மாவட்ட ஆளுநர் டொக்டர் திருமதி அனோமா விஜயசிங்க, முன்னாள் மாவட்ட ஆளுநர் லக்ஸ்மன் விஜய சிங்கா, இணைப்பாளர் க. பதமநாதன் . மற்றும் மாவட்ட பிரதி பொரளாளர் லயன் பாலகுமார் உள்ளிட்ட விருந்தினராக கலந்து கொண்டிருந்தனர்.

# தமிழர் அடையாளத்தை அழிப்பதே சிங்கள பேரினவாதத்தின் இலக்கு

## சீறுகிறார் சிறிதரன்



கிளிநொச்சி, ஜூலை 06

தமிழர்களின் அடையாளங்களை அழிக்க சிங்கள பேரினவாதம் குறியாக உள்ளது என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரும் யாழ். மாவட்ட வேட்பாளருமான சிவஞானம் சிறீதரன் தெரிவித்துள்ளார்.

கிளிநொச்சி - புன்னைநீராவி பிரதேசத்தில் நேற்று இடம்பெற்ற மக்கள் சந்திப்பில் கருத்து தெரிவிக்கும் போதே அவர் அவ்வாறு தெரிவித்தார்.

மேலும், அக்கராயன் மண்ணிலே அக்கிராச மன்னனுக்கு சிலை வைக்கப்பட்டிருக்கிறது. அந்த மன்னனிற்கு ஒவ்வொரு வருடமும் நாங்கள் பொங்கல் பொங்கி மாலை அணிவித்து வணக்கம் செலுத்துவது வழக்கம். இன்று (நேற்று) கரைச்சி பிரதேச சபையால் அந்த மன்னனின் சிலைக்கு மாலை அணிவித்து வணக்கம் செலுத்த சென்ற போது அங்கு, குவிக்கப்பட்டிருந்த இராணுவமும் பொலிஸாரும் இன்று கரும்புலி நாள் அதனைக் கொண்டாட வந்திருக்கிறீர்கள் என்று கூறி மன்னனுடைய சிலைக்கு மாலை அணிவிக்க விடாமல் தடுத்து அனுப்பியிருக்கிறார்கள்.

மூன்று வருடமாக நாங்கள் வணங்கி வருகின்றோம் இந்த வருடம் மட்டும் என்ன காரணம் எனக் கேட்டபோது, காரணம்கூட கூறாது திருப்பி அனுப்பி இருக்கிறார்கள். ஈழத்தில் வாழ்ந்த ஈழ மக்களுக்காக ஆங்கிலேயர்களுடன், போத்துக்கேயருடன் போராடிய எங்கள் பாட்டனுக்கு வணக்கம் செலுத்த முடியாத ஒரு நாட்டில்தான் நாங்கள் இருக்கிறோம், என்றால் எங்களுடைய சுதந்திரத்தை இழந்தவர்களாக எங்களுடைய அடையாளங்களை இழந்தவர்களாக இருக்கின்றோம்.

எங்கள் அடையாளங்களை அழிக்க வேண்டும் என்பதில் சிங்கள பேரினவாதம் மட்டுமல்ல ஒட்டுக்குழுக்கள் அடிவருடிகள் என அனைவரும் குறியாக உள்ளனர். எங்கள் அடையாளத்தை நிலைநாட்ட தமிழர்களாகிய நாம் ஒரு அணியில் ஒன்றாக வீட்டு சின்னத்துக்கு வாக்களித்து பயணிக்க வேண்டும். எங்கள் மண்ணுக்காக குரல்கொடுத்தவர்கள் தொடக்கம் எங்களுடைய மூதாதையர்கள் வரைக்கும் எங்களுடைய பரம்பரையை வணங்க முடியாத ஒரு இனமாக நாங்கள் இருக்கிறோம் என்றால் நாங்கள் சுதந்திரமாக இருக்கிறோமா என்ற கேள்வியை எங்களை நாங்களே கேட்டுக் கொள்ளவேண்டும் - என்றும் குறிப்பிட்டார்.

இந்த சந்திப்பில் முன்னாள் வடக்கு மாகாண கல்வி அமைச்சர் குருகுலராஜா, கரைச்சி பிரதேசசபையின் உப தவிசாளர் தவபாலன் கரைச்சி பிரதேசசபையின் உறுப்பினர்கள் கட்சியின் வட்டார அமைப்பாளர்கள் எனப்பலரும் கலந்து கொண்டனர்.

# யானை உண்ட விளாம்பழமே தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு

## போட்டுத் தாக்குகிறார் சிவசக்தி ஆனந்தன்



கிடைத்த சந்தர்ப்பங்களை தவறவிட்டு, யானைஉண்ட விளாம்பழம் போல வெறுமையான கோதாகவே தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தேர்தல் களத்தில் நிற்கிறது என்று சாடியுள்ளார் அக்கட்சியின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரும், தமிழ் மக்கள் தேசியக் கூட்டணியின் வன்னி மாவட்ட வேட்பாளருமான சிவசக்தி ஆனந்தன்.

வவுனியாவில் நேற்று இடம்பெற்ற மக்கள் மன்றம் நிகழ்வில் கலந்து கொண்டு கருத்து தெரிவித்தபோதே அவர் இதனைத் தெரிவித்தார்.

மேலும், தேர்தல் காலங்களில் ஒன்றைக்கூறிவிட்டு அதற்கு எதிராக செயற்பட்டதன் காரணத்தாலேயே தமிழ்த் தேசிய கூட்டமைப்பில் இருக்காமல் வெளியேறினோம்.

கடந்த அரசுக்கு கால அவகாசத்தை கூட்டமைப்பு வழங்கியதன் மூலம் இன்று கலப்பு விசாரணையும் இல்லை சர்வதேச விசாரணையும் இல்லை. உள்ளகவிசாரணை எனஎதுவுமே இல்லாமல் நீர்த்துப்போகச் செய்யப்பட்டது. இன்று அது தமிழ் மக்களை எங்கு நிறுத்தி இருக்கிறது என்பது உங்களுக்கு தெரிந்த விடயம்.

கிடைத்த சந்தர்ப்பங்களை மக்களுக்காகப் பயன்படுத்தாமல் சுயலாப அரசியலுக்காக கூட்டமைப்பின் பெயரால் ஒரு சிலர் எடுத்துகொண்டதன் முடிவுதான் இது.

இன்று கூட்டமைப்பு யானைஉண்ட விளாம்பழமாக - வெறும் கோதாக தேர்தல் களத்தில் நிற்கிறார்கள். எமது கட்சிக்கு நீண்ட நெடிய வரலாறு இருக்கிறது. இலங்கை இந்திய ஒப்பந்தத்தின் ஊடாக இணைந்த வடகிழக்கு மாகாண அரசை உருவாக்கியிருந்தோம். திருகோணமலையை தலைநகராக மாற்றியிருந்தோம். தற்போதும் புலம் பெயர் மக்களிடம் இருந்து நிதிகளை பெற்று கல்வி சுகாதாரம் வாழ்வாதாரம் போன்ற பல உதவிகளை எமது மக்களுக்கு வழங்கிவருகின்றோம் - என்றார்.

பாகம் – 35

தயாளன்

# கூட்டமைப்பின் உருவாக்கம் எப்படி நிகழ்ந்தது?

**புலிகள் புரிந்த மகா தவறு !**

தமிழீழ விடுதலைப் போராட் டத்தின் வளர்ச்சியில் எதிர் கொண்ட சிரமங்கள், தியாகங்கள், அனுபவித்த துயர்கள் அதனுடன் சம்பந்தப்பட்டவர்களுக்குத்தான் தெரியும். அதன் பெயரால் பலனை அனுபவித்தவர்களால் இவற்றை உணர முடியாது. இந்தப் போராட்டத்தில் தாங்கள் தவறிழைக்கவில்லை எனப் புலிகள் சொல்லவில்லை. அன்ரன் பாலசிங்கம் உட்படப் பலர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்கள்.

வேறு சிலர் புலிகள் புரிந்த தவறுகளைப் பட்டியலிட்டுக்கொண்டு இருக்கிறார்கள். ஆனால் புலிகள் புரிந்த எல்லாத் தவறுகளிலும் தலையானது போராட்டத்துடன் சம்பந்தமில்லாத இரா. துரைரத்தினம் போன்றார் மிக இலகுவில் அரசியல் அடைக்கலம் பெற ஏற்பாடு செய்ததுதான். மற்ற எல்லாத் தவறுகளும் இதை விடக் குறைவானவைதான். கிளிநொச்சியில் இயங்கிய அரசியல்துறை நடுவப் பணியகமும், சமாதானச் செயலகமும் இவருக்கு உயிர் அச்சுறுத்தல் உள்ளதாகத் தவறாகக் கணித்தன. அதன் அடிப்படையில் அரசியல் புகலிடம் சம்பந்தமான விடயங்களைக் கையாண்டன.

அது மட்டுமல்ல சுவிஸ் நாட்டுக்குச் சென்ற கௌசல்யன் முதலான பிரமுகர்களும் சில ஏற்பாடுகளைச் செய்தனர். அத்துடன் மாதாந்தம் சில ஆயிரக்கணக்கான சுவிஸ் பிராங் கிடைக்கக்கூடிய வகையில் இவர் போன்றொருக்களுக்கான வேலைத் திட்டங்களும் உருவாக்கப்பட்டன.

புலிகளின் பணத்தில் சிங்கப்பூர் முதலான இடங்களுக்குச் சென்று வந்தனர். கடமை நிமித்தம் இவ்வாறு அனுப்பி வைக்கப்பட்டதும் தாங்கள் இதுவரை கற்பனை செய்திராத தகுதிகள் தமக்கு வந்துவிட்டதாக இவர்கள் கருதினர். இதேவேளை போராட்டத்துக்குப் பங்களிப்புச் செய்தவர்களும், நேரடியாகப் போராட்டத்தில் பங்குபற்றியவர்களும், நாட்டுக்குச் சென்றால் உண்மையிலேயே உயிருக்கு அச்சுறுத்தல் உடையவர்களும் இன்னமும் முழுமையான அரசியல் தஞ்சம் கிடைக்காமல் கடும் குளிரில் சுத்திகரிப்புப் போன்ற பணிகளில் ஈடுபட்டு வருகின்றனர். எந்தத் தொழிலும் கேவலமானதல்ல. எனினும் இவர்களில் கணிசமானோர் இந்தப் பிரகிருதிகளைவிட உயர் கல்வித் தகைமை கொண்டவர்கள் என்பது நிச்சயம். இவர்களைப் பரிகாசம் செய்யவும் இந்தத் திடீர் தேசியவாதிகள் தயங்கவில்லை. நாட்டில் பிரச்னை தீரக் கூடாது என்பதில் அரசியல் தஞ்சம் கிடைக்காதோர். அக்கறையாக இருக்கின்றனர் என்பது போன்ற செய்தியை இவர் வெளியிட்டு வருகின்றார். பத்திரிகையாளர் என்ற பெயரில் அரசியல் தஞ்சம் பெற்றோரில் உண்மையானவர்களைவிட போலியான பத்திரிகையாளர்களே அதிகம் என்ற மாதிரியும் காட்டிக்கொடுப்பில் ஈடுபடுகின்றர். இவர்களுக்கே யார் யார் பத்திரிகையாளர் என்பது தெரியாது. தெரிந்ததெல்லாம் கிழக்கிலங்கைப் பத்திரிகையாளர் தாமே என்று பீற்றிக் கொள்வதுதான். இவர்களில் எவரும் கிளிநொச்சியில் சமாதான காலத்தில் பிரபாகரன் கலந்து கொண்ட பத்திரிகையாளர் மாநாட்டுக்கென எந்த நிறுவனத்தினாலும் அனுப்பி வைக்கப் படவில்லை. ஏன் வன்னியிலிருந்து வெளிவந்த ஈழநாதம், விடுதலைப் புலிகள் பத்திரிகை ஆசிரியர்களுக்கும் இவர்களைத் தெரியாது.

கிழக்கிலங்கைப் பத்திரிகையாளர் சங்கத்தில் அங்கம் வகித்த மட்டக்களப்பு வீரகேசரி நிருபர் இராசையா. நித்தியானந்தன் (நித்தி) புளொட்டினால் வெட்டப் பட்டு ஆண் உறுப்புப் பகுதியில் அசிட் திராவகம் ஊற்றப் பட்டு மரணத்தின் வாசலை எட்டித் தொடுமளவுக்கு குற்றுயிரும் குறையுயி ருமான நிலையில் வைத்தியசாலைக்கு அனுப்பப்பட்டார். "கொண்டல்" பத்திரிகையின் ஆசிரியராக விளங்கிய வர்ணகுலசிங்கம் என்பவர் ஊரணியில் கைதுசெய்யப்பட்டுப் படுகொலை செய்யப்பட்டார்.

தமிழ்ப் பகுதிகளில் கூட்டுப் பாலியல் வன்முறைக்கு முதலில் பலியானவர். மட்டக்களப்பு ஆரையம்பதியைச் சேர்ந்த உயர்தர மாணவியான நல்லதம்பி அனுஷ்யா (விஜி - 1990 டிசம்பர் 01) இந்த விடயத்தை வெளிக்கொணர மூத்த ஊடகவியலாளர்கள் என்று சொல்லிக் கொள்ளும் இரா. துரைரத்தினமோ, நிராஜ் டேவிட்டோ துணியவில்லை. அப்போதெல்லாம் இவர்கள் மூலையில் முடங்கிக் கிடந்தனர். ஏன் இந்த விடயங்களில் காத்திரமான நடவடிக்கை எடுக்கத் துணியவில்லை. இந்த லட்சணத்தில் தாங்கள்தான் கூட்டமைப்பை உருவாக்கினார்களாம். கேட்கிறவன் கேணையனாக இருந்தால் எருமை மாடும் ஏரோப்பிளேன் ஓட்டுமாம் என்று கூறுவார்கள். இன்று அரசியல் தஞ்சம் கிடைக்காதோரை மறைமுகமாக கிண்டல பண்ணும் இவர் தற்போது பத்திரிகையாளருக்கு எந்த ஒரு அச்சுறுத்தலும் இல்லை - நாட்டுக்குத் திரும்பி வாருங்கள் என்று ரணில் விடும் அழைப்பை ஏற்று இலங்கைக்குத் திரும்ப வேண்டியதுதானே?

**2009 வரை மௌனம் ஏன்?**

இன்று அடுக்கடுக்காகப் புலிகள் மீது குற்றச்சாட்டுக்களை வீசும் இவரது பேனா 2009 வரை ஏன் மௌனமாக இருந்தது? அது 100 வீதம் சந்தர்ப்ப வாதம்தானே? இலங்கை - இந்திய ஒப்பந்தத்தைப் பிரபாகரன் ஏற்றுக்கொண்டார் என்று எழுதினார். ஆனால், சுதுமலை உரையில் அவர் சொன்னது, "சிங்கள இனவாத பூதம் இந்த ஒப்பந்தத்தை விழுங்கும் காலம் வெகுதூரத்தில் இல்லை", என்பதே. இவர் வாழ்க்கையில் பிரபாகரனைக் கண்டதில்லை. இவரது ஹீரோ விசு மட்டுமே.

வாகரை மாநாட்டுக்கு வந்த சமயம் பத்திரிகையாளர் என்ற வகையில் உதயகுமார், குமரகுரு ஆகியோரை மட்டுமே அன்ரன் பாலசிங்கம் சந்தித்தார். எல்லோருமே தமிழீழக் கோரிக்கையைக் கைவிட்டவர்கள்தான் என்று இவர் எழுதினார். பிரபாகரன் ஒன்றும் இரா. துரைரத்தினம் இல்லை. 2009 இல் ஒரு நிலைப்பாடும் பின்னர் வேறு நிலைப்பாடும் எடுக்க.



அரசுடனான புலிகளின் பேச்சுகள் எப்போதும் எதைப் பெற்றுக்கொள்வது என்பதாகவே இருந்தன. மாறாக ஏனைய தலைமைகள் மேற்கொண்ட பேச்சுக்கள் சிங்களவருக்காக எதை விட்டுக்கொடுப்பது என்பதாகவே அமைந்திருந்தன. இதனை விளங்காமல் புலிக்கு எதிராக எதையாவது எழுதினால் சரி என்றால் எப்படி? வரலாறு இவர்களைக் குப்பைத் தொட்டிக்குள்தான் வீசும்.

■ ■ ■

**தனது தப்பை உணருமா ஐ. பி.சி ?**

ஐ.பி.சி நிறுவனத்துக்கு ஒரு கடப்பாடு இருக்கிறது. தம்மைத் தவறாகப் பயன்படுத்த அனுமதிக்கக் கூடாது என்பதில் அந்த நிறுவனம் உறுதியாக இருக்க வேண்டும். தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் உருவாக்கம் தொடர்பான கருத்து நிராஜ் டேவிட்டின் சொந்த நிலைப்பாடு என நாம் கருதுகிறோம். அவர் ஐ.பி.சி. நிறுவனத்தைத் தவறாகப் பயன்படுத்திய போது நிறுவனம் மௌனமாக இருந்திருக்கக் கூடாது. இந்நிறுவனத்தின் ஐ.பி.சி. தமிழ் பத்திரிகையை வெளியிட்டு வரும் ரவி அருணாசலம் போன்றோர் நிராஜின் நிலைப்பாட்டில் உள்ளனர் என நாம் நம்பவில்லை. ரவி அருணாசலம் நீண்ட காலம் புலிகளின் நிலைப்பாட்டில் இருந்து மாறுபாடான கருத்தைக் கொண்டவராக இருந்திருக்கிறார். எனினும் தமிழ்த் தேசியத்தின் பக்கமே அவர் இருந்திருக்கிறார். நிராஜ் கிழக்கிலங்கை கடதாசி ஆலைக்கு கூட்டுத்தாபனத்தில் இருந்த காலத்திலேயே ஒரு சஞ்சிகையின் பெயரால் 'புதுசு' ரவி என அழைக்கப்பட்டவர். அவருக்கு தமிழீழப் விடுதலைப் போராட்டத்தின் வீச்சு, தமிழர் அரசியலின் யதார்த்தம் புரியும். பல்வேறு இயக்கச் சார்பானவர்கள் இணைந்து நடித்த 'மண் சுமந்த மேனியரில்' இவரும் பங்களித்திருந்தார். எனவே 'பிரபாகரம்' நிகழ்ச்சியில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் உருவாக்கம். தொடர்பாக நிராஜ் வெளியிட்ட கருத்து நிறுவனத்தின் நிலைப்பாடல்ல என்பதை ஐ.பி.சி வெளிப்படுத்த வேண்டும்.

தவறை ஒப்புக்கொள்ளத் தைரியம் வேண்டும். இதற்கு கிட்டு ஓர் உதாரணம். பாசையூரில் ஒரு மரதன் ஓட்ட வீரர் இருந்தார். புலிகள் இயக்க உறுப்பினர்கள் தமது ஓட்டத் திறனை அதிகரிக்க விரும்பினர். அதற்கு தங்களைவிட நன்றாக ஓடக்கூடிய ஒருவர் வேண்டும். எனவே குடா நாட்டில் எங்கெங்கு மரதன் ஓட்ட நிகழ்வுகள் நடைபெறுகின்றனவோ அங்கெல்லாம் இவரை அழைத்துச் செல்வர். 1983 க்குப் பின்னர்தான் தன்னை அழைத்துச் சென்றவர்கள் புலிகள் என அவருக்குச் தெரிந்தது. சுமார் இரு வருடங்களாக இவரது வீட்டில் போய்ப் பழகியும் தம்மை அடையாளம் காட்டவில்லை புலிகள். இவரது வீட்டில் பழகிய காலத்தில் அப்பகுதியில் இருவர் புலிகள் இயக்கத்தில் இணைந்து கொண்டனர். இவர்கள் இருவரும் மட்டக்களப்பில் உயிரிழந்தனர். ( ராமு -பிரான்சிஸ் திலகம் 25.08.1986), நரேன் (ஏபிரகாம்லிங்கன் விஜயசுதன் 24.12.1986) இவரது மைத்துநர் (சகோதரியின் கணவர்) ஒரு நாள் போராளியொருவருக்கு அடித்து விட்டார். இப்பகுதியில் அயலவர்களுக்கிடையே தகராறு நடந்தது. அவ்வேளை ஒரு பெண்ணுக்கு ஒருவர் அடிப்பதை அவ்வழியாகத் சென்ற பிரதேசப் பொறுப்பாளர் பார்த்து விட்டார். "என்ன பொம்பிளைக்கு அடிக்கிறீர்?" எனக் கேட்டு அடித்தவரைத் தாக்கி விட்டார். இதில் சம்பந்தப்பட்டவர் தான் மரதன் ஓட்ட வீரரின் மைத்துநர், பெண்களுக்கு முன்னால் தனக்கு அடிப்பதா என ஆத்திரமுற்ற அவர் அப்போராளியைத் திருப்பித் தாக்கினார். இச் சம்பவத்தைக் கிட்டுவின் பணிமனைக்குத் தெரிவித்து விட்டு வேறு ஒரு விடயமாக வட்டுக்கோட்டைத் தொகுதிக்குச் சென்று விட்டார் பிரதேசப் பொறுப்பாளர். "இயக்கத்துக்கு அடிப்பதா" என எண்ணிய போராளிகள் சிலர் அடித்தவரைத் தேடி அவரது வீட்டுக்குச் சென்றனர். அவரைக் காணவில்லை. வீண் பிரச்னை எதற்கு எனக் கருதிய அக்குடும்பத்தவர்கள் தம்முடன் முதலில் பழகிய போராளியின் வீட்டுக்குச் சென்று நடந்ததைக்கூறினர். அவர் கச்சேரியடியில் இருந்த பிரதேசப் பொறுப்பாளரின் பணிமனைக்குச் சென்றார். பிரதேசப் பொறுப்பாளர் வரக் காலதாமதமாகும் எனத் தெரிந்தது. வந்தால் தன்னை வந்து சந்திக்குமாறு கூறி விட்டுச் சென்றார் அந்தப்போராளி. இதற்கிடையில் இரு தடவைகள் அடித்தவரைத் (மரதன் ஓட்ட வீரரின் மைத்துநரை) தேடி புலிகள் உறுப்பினர்கள் சென்றிருக்கின்றனர். இந்நிலையில் அப்பகுதி கிறிஸ்தவ மதகுரு ஒருவர் மூலம் புலிகளிடம் அவரை ஒப்படைத்தனர் குடும்பத்தினர். விளைவு அவரது உயிர் பிரிந்து விட்டது. தவறான முறையில் இவ்விடயம் கையாளப்பட்டு விட்டது. தாங்கள் ஒப்படைத்தவரைச் சடலமாகத் தருகிறார்களே என அவரது குடும்பத்தினர் ஆத்திரப்பட்டனர். இவ்விடயத்தில் அவர்கள் தமது கோபத்தை வெளிப்படுத்திய விதம் இயல்பானதே. நியாயமும் கூட. அவரது மரணத்துக்கு எந்தச் சமாதானமும் சொல்ல முடியாது. ஆகவே இதற்கு பதிலளிக்க வேண்டிய கடமை கிட்டுவுக்கு இருந்தது.

சில நாட்களின் பின் நடைபெற்ற மாபெரும் ஊர்வலம் ஒன்றின் இறுதியில் நல்லூர் கந்தசாமி ஆலய முன்றலில் கூட்டம் நடைபெற்றது. இதில் கிட்டு உரையாற்றினார். பாஷையூர் சம்பவத்தை தமது தவறு எனக் குறிப்பிட்டார். இச்சம்பவத்துடன் சம்பந்தப்பட்ட உறுப்பினர்களுக்குத் தான் தண்டனை வழங்கியதாகத் தெரிவித்தார். அவர் ஆற்றிய உரை அச்சம்பவத்துக்காக வருந்துவதைத் தெளிவாக்க காட்டியது.

அக் குடும்பத்தினருடன் முதலில் தொடர்புகொண்ட போராளிக்கு மிகவும் சங்கடம்.

(நாளையும் வரும்)

# இன்றைய தொலைக்காட்சி நிகழ்ச்சி நிரல்

**காலை**
6.00 மணி : **பக்திப்பாடல்கள்**
6.30 மணி : **வணக்கம் டான்**
6.31 மணி : **தினம் ஒரு திருக்குறள்**
வழங்குபவர் : சொல்லருவி லலீசன்
6.35 மணி : **மதம் சார்பான நற்சிந்தனைகள்**
6.55 மணி : **இன்றைய பலன்**
வழங்குபவர் : சைவ சித்தாந்த பண்டிதன் சிவஸ்ரீ.தியாக.சோமஸ்கந்தராஜக்குருக்கள்
7.05 மணி : **உளவியல் கருத்து**
வழங்குபவர் :திருதி கோகிலா மகேந்திரன்
7.15 மணி : **கதைவழி அறமொழி**
வழங்குபவர் : திரு. எப்.எக்ஸ்அன்ரன் கோட்டக்கல்விப் பணிப்பாளர், நல்லூர்
7.20 மணி : **சித்த மருத்துவம்**
வழங்குபவர் டாக்டர் விவியன் சத்தியசீலன்
7.30 மணி : **பத்திரிகைகள் ஒரு பார்வை**
8.30 மணி : **காலை செய்திகள்**
9.00 மணி : **காலைக்கதிரொளி** (நேரலை )
10.30 மணி : **தொடர் நாடகம்**
11.00 மணி : **பெண் பூவே**
**பகல்**
12.00 மணி : **சிரிக்கலாம் வாங்க**
பகல்
1.00 மணி : **அறிந்தும் அறியாமலும்** ( மறு ஒளிபரப்பு )
1.30 மணி : **சுப்பர் சீன்ஸ்**
சமந்தா , லக்ஸ்மி மற்றும் பலர் நடிப்பில் **'ஓ பேபி'**




சந்தோஸ் பிரதாப் , ரேஸ்மி மேனன் நடிப்பில் **'பயமா இருக்கு'** திரைப்படக் காட்சிகள்




4.30 மணி : **இப்படியும் பாடலாம்**
5.00 மணி : **டிக் டொக்**
5.30 மணி : **குறுந்திரை நேரம்**
6.00 மணி : **பத்துக்கு பத்து**
**இரவு**
7.00 மணி : **சொற்சமர்**
இயற்கை முறையிலானா விவசாயத்தின் தேவை தொடர்பான விவாதம்




8.00 மணி : **இரவுச் செய்திகள்**
9.00 மணி : **சாட்சியம்**
9.30 மணி : **நட்சத்திர கொமடி**
10.00 மணி : **யாவரும் கேளீர்**

**காலை**
6.00 மணி : **சிரி சிரி சிரி**
8.00 மணி : **சிரிப்பு சரவெடி**
10.00 மணி : **ஒரு பட கொமடி**
11.00 மணி : **சிரிப்போ சிரிப்பு**
**பகல்**
1.00 மணி : **நகைச்சுவை மன்னன்**
கவுண்டமணி -செந்தில் நடிப்பில் கலக்கல் காட்சிகள்
3.00 மணி : **குண்டக்க மண்டக்க**
5.00 மணி : **ஒரு பட கொமடி**
6.00 மணி : **கொமடி கலாட்டா**
**இரவு**
8.00 மணி : **ஒரு படக் கொமடி**
9.00 மணி : **சிரிப்போ சிரிப்பு**
10.00 மணி : **விடிய விடிய சிரிப்பு தான்**

**காலை**
6.00 மணி : **பனிப்பூக்கள்**
7.00 மணி : **திசை எட்டும் இசை எட்டும்**
8.00 மணி : **வணக்கம் டான் மியூசிக்**
9.00 மணி : **மெல்லிசை**
10.00 மணி : **கேட்டாலே பரவசம்** (நேரலை)
**பகல்**
12.00 மணி : **ராஜா ராணி**
1.00 மணி : **விசை இசை**
3.00 மணி : **வட்ஸ் அப்** (நேரலை)
4.00 மணி : **டீ டைம் ராகங்கள்** (நேரலை)
5.00 மணி : **இனிது இனிது** (நேரலை)
6.00 மணி : **என்றென்றும் இசை** (நேரலை)
**இரவு**
7.00 மணி : **ஓய்வெடு நிலவே**
8.00 மணி : **காற்றில் வரும் கீதம்**
9.00 மணி : **நிலவு தூங்கும் நேரம்**

**காலை**
5.15 மணி : **தரம் 06 - தமிழ்**
6.00 மணி : **தரம் 07 - விஞ்ஞானம்**
6.45 மணி : **தரம் 08 - கணிதம்**
7.30 மணி : **தரம் 09 - தமிழ்**
8.15 மணி : **தரம் 10 - விஞ்ஞானம்**
9.00 மண :**க.பொ.த உயர்தரம் (கலைப்பிரிவு)**
தமிழ்
10.00 மணி :**க.பொ.த உயர்தரம் (வணிகப்பிரிவு)**
பொருளியல்
11.00 மணி :**க.பொ.த உயர்தரம் (கணித, விஞ்ஞான பிரிவு)**
கணிதம்
**பகல்**
12.00 மணி : **தரம் 10 - விஞ்ஞானம்**
01.00 மணி : **தரம் 09 - கணிதம்**
02.00 மணி : **தரம் 06 - ஆங்கிலம்**
03.00 மணி :**க.பொ.த சாதாரண தரம் தமிழ்**
03.40 மணி : **க.பொ.த சாதாரண தரம் கத்தோலிக்கம்**
04.20 மணி : **க.பொ.த சாதாரண தரம் ஆங்கிலம்**
05.00 மணி :**க.பொ.த சாதாரண தரம் கணிதம்**
05.40 மணி :**க.பொ.த சாதாரண தரம் தகவல் தொழில்நுட்பம்**
06.20 மணி :**க.பொ.த சாதாரண தரம் வரலாறு**
**இரவு**
07.00 மணி : **க.பொ.த உயர்தரம் வணிகக்கல்வி மாதிரி வினாத்தாள்**

**காலை**
05.00 மணி : **சிவாய மந்திரம்**
06.00 மணி : **சுப்ரபாதம்**
07.00 மணி : **இன்றைய சிந்தனை**
07.05 மணி : **இன்றைய நாள்**
07.20 மணி : **சின்மய சிந்தனை**
07.30 மணி : **மங்கள இசை**
08.00 மணி : **அருளுரை**
08.30 மணி : **திருவாசகம்**
09.00 மணி : **திருவிழா - 01**
10.00 மணி : **புதியதோர் தொடக்கம்**
10.30 மணி : **பஜனை**
11.00 மணி : **பக்திமலர்**
**பகல்**
12.00 மணி : **திரையில் பக்தி**
12.30 மணி : **திருவிழா - 02**
0 6.00 மணி : **கந்தசஷ்டி கவசம்**
**இரவு**
07.00 மணி : **அருளுரை**
07.30 மணி : **திருவாசகம்**
08.00 மணி : **திருவிழா - 01**

**காலை**
7.00 மணி - **ஆலயப் பாடல்கள்**
8.00 மணி - **ஜெபமாலை**
9.00 மணி - **மாதா மன்றாட்டு மாலை**
10.00 மணி - **திருப்பலிப்பாடல்கள்**
10.30 மணி - **குழந்தை யேசு மன்றாட்டு**
11.00 மணி - **ஜெபமாலை**
**பகல்**
12.00 மணி - **திருகோணமலை திருப்பலி**
1.00 மணி - **மட்டக்களப்பு திருப்பலி**
2.00 மணி - **நற்சிந்தனை**
3.00 மணி - **பாடல்**
4.00 மணி - **திருகோணமலை திருப்பலி**

**காலை**
6.00 மணி : **கிராத்**
7.00 மணி : **இறை சிந்தனை**
7.30 மணி : **இஸ்லாமிய பாடல்**
8.00 மணி : **கலந்துரையாடல்**
9.00 மணி : **இஸ்லாமிய சீரிஸ்**
10.00 மணி : **மனதோடு பேசலாம்**
10.30 மணி : **கண் வண்ணம் கை வண்ணம்**
11.00 மணி : **சுவனப் பாதை**
11.30 மணி : **வரலாறு சொல்லும் வைத்தியம்**
12.00 மணி : **லுகர் அதான்**
**பகல்**
12.30 மணி : **இஸ்லாமிய வரலாறு**
1.00 மணி : **இஸ்லாமிய திரைப்படம்**
2.00 மணி : **கஸீதா**
2.30 மணி : **இறை சிந்தனை**
3.00 மணி : **பாடல்கள்**
4..00 மணி : **சிறுவர் இஸ்லமிய கார்டுன்**
5.00 மணி : **இறை தென்றல்**
6.00 மணி : **தாஜீமதுல் குர்ஆன்**
**இரவு**
7.00 மணி : **பிறை பிரசங்கம்**
8.00 மணி : **இஸ்லாமிய வரலாறு**
8.30 மணி : **மனதோடு பேசலாம்**

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிரைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 06.07.2020 அன்று வெளியிடப்பட்டது.